මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல. : PRE/2024/103** **2024.09.20**

**சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21**
**வலிமையிழப்பிற்குட்பட்டவர்களை உள்ளீர்ப்பதற்காக**
**தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள வசதிகள்**

சனாதிபதித் தேர்தலின் போது உடல் வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களுக்கு எந்தவித அசௌகரியங்களுமின்றி தமது வாக்கை அடையாளமிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வலிமையிழப்பிற்குட்பட்டவர்களுக்காக வசதிகளை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்கான அனுமதி வழங்குதல்
- விசேட போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக அனுமதி வழங்குதல்
- உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவர்களுக்காக வாக்கெடுப்பு நிலையங்களுக்கு உட்செல்வதற்காக நுழைவாயிலிலிருந்து வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள கட்டிடம் வரையான தூரம் 100 மீட்டருக்குக் கூடியதாக இருப்பின், அக்கட்டிடம் வரை முச்சக்கர வண்டி மூலம் அழைத்துச் செல்ல அனுமதியளித்தல்.
- கட்புலனற்ற வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காக தொடுகை மூலம் உணரக்கூடிய சட்டகம் பயன்படுத்துவதற்கு அவசியமான வசதிகள் வழங்குதல்
- தேர்தல் ஆணைக்குழுவினால் உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் வாக்கெடுப்பு நிலையத்தில் செல்லுபடியான அடையாள அட்டையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல்
- வாக்கெடுப்பு நிலையத்தினுள் காட்சிப்படுத்துகின்ற அறிவித்தல்களை, சைகை மொழி மூலமான உருவப்படங்கள் அடங்கிய அறிவித்தலாகக் காட்சிப்படுத்துதல்.
- தேர்தல் பெறுபேறுகள் வெளியிடும் நடவடிக்கைகளை சைகை மொழியில் மொழிமாற்றம் செய்து வெளியிடல்.
- ஏனைய பொது வசதிகள் மற்றும் வலிமையிழப்பிற்குட்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனுமதிக்கப்பட்ட பொது வசதிகள}
    - வாக்கை அடையாளமிடும் சிற்றறையினுள் போதியளவு வெளிச்சம் வரும் வகையில் வசதியான இடத்தைத் தெரிவு செய்தல் மற்றும் இயலுமாயின் மின்விளக்கு ஒன்றைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்
    - வாக்குப் பெட்டியை வைத்திருக்கும் மேசை குறைந்த உயரத்தில் இருத்தல். (சக்கர நாற்காலி பயன்படுத்தும் நபர்கள் மற்றும் குள்ளமான நபர்களுக்கு வசதியான வகையில்)
    - பகுதியளவில் கட்புலனற்ற நபர்களுக்காக எழுத்துக்களை பெரிதாக்கிக் காட்டுகின்ற உபகரணங்கள் (உருப்பெருக்கிக் கண்ணாடி, விசேட மூக்குக் கண்ணாடி போன்ற) இவற்றை வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்ல முடியுமென்பதுடன், அவற்றைப் பயன்படுத்துவதற்கும் அனுமதியளித்தல்
    - வாக்குச் சீட்டை வாசித்துக் கொள்ள முடியாத நபர்களுக்கும், தெளிவு படுத்தல்கள் அவசியமானவர்களுக்கும் அவசியமான தெளிவுபடுத்தல்களைச் செய்தல். அதற்காக போதியளவு கால அவகாசம் வழங்குதல்.

அத்துடன் உடல் வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களுக்கு எவ்வித இடையூறுகளுமின்றி தமது வாக்கை அடையாளமிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் உள்ளிட்ட அனைத்து பணியாட்குழுவினருக்கும் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளைப் பின்பற்றுதல் வேண்டுமென இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**